1981 பிப்ரவரி 5]

திரு. இ. கணேசன் :—பேரவைத் தலைவரவர்களே, பணி மனை இல்லாமல் இன்னும் பல கிராமங்களுக்கும் பல பெரு நகரங்களுக்கும், புதிய வழித்தடங்கள் விடப்படாமல் இருக்கின்றன. அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசு உணருமா? உடனடியாக அந்தப் பணிமனையை நடப்பாண்டில் கட்டுவதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, பணிமனை வேலைகள் விரைவாக முடிக்கப்பட்டு, அங்கே புதிதாகப் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு அந்த வசதி ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன்: பேரவைத் தலைவரவர்களே, இடைப்பாடி அண்ணா போக்குவரத்துக் கழகம் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. அங்கே இரவு நேரங்களில் வண்டிகள் நிற்கக்கூட முடியாமல் பாதையிலே நிறுத்தப்பட்டு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் செய்து வருகிறார்கள் ஆகவே உடனடியாக அந்த வேலைகளைச் செய்ய டெப்போவைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 15 பேருந்துகள் இருக்கின்றன என்றும் அவைகளை நிறுத்துவதற்கு இடம் இல்லாத காரணத்தால்தான் அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவாக அந்த வேலை முடிககப்படும்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு வரி விலக்கு.

*வினா எண் 39—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற டிராக்டர்களுக்கு டோக்கன் காலாண்டுக்கு ஒரு முறை வாங்கும் முறையை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது ரத்து செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) விவாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர்-டிரெயிலர் வண்டிகள் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய

வண்டிகளில்சொந்த விவசாயத்திற்காகப் பயன் படுத்தப்படுகின் வண்டிகளுக்கு ஆண்டுக்கொரு முறை இலவச வரி வில்லைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படும் வாடகை வண்டிகளுக்கு ஆறு மாதத்திற்கொரு முறை இலவச வில்லைக ள்வழங்கப்படவேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்காகப் பயன்படுத்துகின்ற டிராக்டர்களுக்கு எ ப் சி. பெற வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அதனால், விவசாயிகளுக்குப் பெரிய தொல்லைகளும், இடைஞ்சல்களும் உண்டாகின்றன. அந்தச் சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: விவசாயத்திற்குப் பயன் படுத்துகின்ற டிராக்டர்களுக்கு எஃப்.சி. பெற வேண்டுமென்றி ருப்பது அரசாங்கத்தினுடைய நன்மையைக் கருதி அல்ல, விவசாயிகளுடைய நன்மையைக் கருதித்தான். டிராக்டர்களைப் பயன்படுத்தும்போது, அது சரியில்லாமல், அதன்காரணமாக விவசாயிகளுக்கு ஆபத்துக்கள் வரக் கூடாது என்பதற்காகத் தான், அது சரியாக இருக்கிறதா என்று பார்த்து அதைப் பயன்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. ஓராண்டுக்கு ஒரு முறைதான் அதைச் செய்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்கத்தானே ஒழிய அரசாங்கத்திற்கு எந்தவிதமான நன்மையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர் களே, மோட்டார் வாகன வரிச் சட்டத்தின்கீழ், விவசாயத் திற்காக மட்டும் என்ற சலுகையைப் பெற்றுக்கொண்டு, டிராக்டர்களை பொதுப் பார உந்து வண்டியாகப் பயன்படுத்து வதைத் தடுக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பயன்படுத்தக் கூடாது என்ற விதி இருக் கிறது. கடுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இப்படி யாராவது பயன் படுத்துவார்களானால், அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சபாநாயகர் அவர்களே, டிராக் டர்களை விவசாயிகள் பயன்படுத்துகின்ற நேரத்தில், ஒரு விவசாயி, மற்றொரு விவசாயிக்கு உதவுகின்ற வகையில் டிராக் டர்களை அவர்களே கொடுக்கவும், அல்லது பயன்படுத்தவும் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அதை வாடகைக்கு விடுகிறார்கள் என்ற அடிப்படையில் அவர் களுக்கு இப்பொழுது ½ ஆண்டுக்கு ஒரு தடவை வரி விதிப்

1981 பிப்ரவரி 5]

பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலைமையை மாற்றி விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய எல்லா டிராக்டர்களுக்கும் ஆண்டுக்கொரு முறைதான் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையையும், அந்த வரியை வசூலிக்கின்ற முறையை அறவே ரத்து செய்யவும் அரசாங்கம் முன் வருமா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுத்த கூடிய சொந்த வண்டியாக இருந்தாலும், வாடகை வண்டியாக இருந்தாலும், வரியே இல்லை. அந்த வரியை ரத்து செய்திருக்கிறோம். ஆனால் 6 மாதத்திற்கு ஒரு முறை வில்லைகள் வாங்க வேண்டுமென்று சொல்லியிருப்பதற்குக் காரணம் அந்த வண்டிகள் தனியாரால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், வாடகைக்கு அதைப் பயன்படுத்துகின்றபொழுது, நிறைய வேலைகள் அதற்கு இருக்கிற காரணத்தால், 6 மாதத்திற்கு ஒரு முறையாவது அதிகாரிகள் பார்த்து நல்லமுறையில் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை வைத்திருக்கிறோமேயொழிய வேறு எதற்காகவும் இல்லை.

கடையநல்லூரில் நூற்பு மற்றும் சாயத் தொழிற்சாலை.

*வினா எண். 197— திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரில் ஒரு நூற்பாலையும், சாயத் தொழிற்சாலையும் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :—

இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதி கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. ஏறக்குறைய 6,000 தறிகள் அங்கேயிருக்கின்றன. அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏறத்தாழ 7,000 தறிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு நூற்பாலை அமைக்கப்படுமா ? அதே நேரத்திலே, சாயம் போடுகின்ற தொழில் அங்கே அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தால், சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் பேட்டையில் நவீன சாயத் தொழிற்சாலை ஒன்று திறந்து விடப்பட்டிருக்